Date : 23.06.2025

SC.No. : 40/2016

PW : 9

Name : திரு.முத்துகிருஷ்ணன்

Calling : சார்பு ஆய்வாளர் ( ஓய்வு )

சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்குவிசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** :

எனக்கு எந்த தேதியில் எத்தனை மணிக்கு தகவல் கிடைத்து என்று கேட்டால் 25.01.2015 ம் தேதி காலை 9.15 மணிக்கு தகவல் கிடைத்தது. நான் மதுரையில் உள்ள அரசு மருத்துவமனைக்கு காலை 10.30 மணிக்கு சென்றேன். எழுதிவைத்த புகாரை என்னிடம் கொடுத்தார். அப்போது அவருடன் யார் இருந்தார்கள் என்று கேட்டால் எனக்கு நினைவில்லை. எத்தனை மணிக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் 14.00 மணிக்கு பதிவு செய்யப்பட்டது. சம்பவம் நடந்து எத்தனை மணி நேரம் கடந்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்று கேட்டால் தெரியாது. புலன் விசாரணை அதிகாரி வசம் கோப்பு எப்போது ஒப்படைக்கப்பட்டது என்றால் நீதிமன்றத்திற்கு முதல் தகவல் அறிக்கையை அனுப்பி வைக்கப்பட்ட பின்பு பூவந்தி காவல் நிலையம் சென்று ஒப்படைத்தேன். நீதிமன்றத்திற்கு முதல் தகவல் அறிக்கை 3 நாட்கள் காலதாமதமாக கிடைத்துள்ளது என்றால் அன்றையதினமே தனி மேசேஜர் மூலம் கொடுத்து அனுப்பினேன். முருகானந்தம் அவர் சாட்சியத்தில் 3 நாட்கள் மயக்கத்தில் இருந்ததாகக் கூறியுள்ளார், அவ்வாறு இருக்கும் பட்சத்தில் நான் யாரிடம் புகார் வாங்கினேன் என்றால் அவர் மயக்கத்தில் இருந்தாரா, இல்லையா என்று எனக்குத் தெரியாது. நான்

சென்ற போது, அவர் புகாரை என்னிடம் எழுதிக்கொடுத்தார். நான் சொல்வது போல் சொன்ன மாதிரி, சொன்ன நேரத்தில் புகார் எதுவும் பெறவில்லை என்றும், வழக்கின் தோதிற்காக கலந்து ஆலோசணை செய்து பின்னிட்டு புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**-Sd-**
**Chief Judicial Magistrate,**
**Sivagangai.**